பாடம் 13

# எனக்காகச் செய்தாய்

**சுகமில்லாமல் மருத்துவமனையிலே இருக்கும் தன் நண்பரது தோட்டம் அழகற்று இருப்பதைக் கண்டார் அப்பா. எனவே அவர்களது தோட்டத்தின் புல்தரையைச் சுத்தமாக்கும் கருவியையும் துடைப்பத்தையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார். இன்றைய பாடத்தின்மூலம் இயேசு தேவன் நமக்குச் சொல்வது என்ன?**

சீடர்களும் மற்ற மக்களும் இயேசு தங்களுக்குச் சொல்லப் போகும் கதைகளையும், உவமைகளையும் கேட்க மிகவும் ஆவலாயிருந்தனர்.

இயேசு அவர்களுக்கு மிக முக்கியமான ஒரு தேவசெய்தியைக் கொடுத்தார். இச்செய்தியை நாமும் கவனமாக நினைவில் வைத்திருக்க விரும்பினார்.

‘மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் தமது தூதர்கள் சூழ வானத்திலிருந்து இறங்கி வருவார்’ என்றும் ‘அவர் ராஜாதி ராஜாவாக வருவார். பூமியிலுள்ள மக்கள் யாவரும் அவர் முன்னே நிற்பார்கள். அப்போது ராஜா (இயேசு) தம்முன் நிற்கும் மக்களை,



## மனன வசனம்

**இந்தச் சிறியரில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்.**

**மத்தேயு 25:40.**

மேய்ப்பர்கள் ஆடுகளை இரண்டாகப் பிரிப்பது போலப் பிரிப்பார். வெள்ளாடு செம்மறியாடுகள் என 2 பிரிவாகப் பிரிப்பார்' என்று தம்மைக்குறித்தும், தமது இரண்டாம் வருகையைக்குறித்தும் இயேசு அவர்களிடம் பேச ஆரம்பித்தார்.

'ராஜா தமது வலப்பக்கமாக தமது பிள்ளைகளை நிறுத்துவார். அவர்களிடம், "நான் பசியாயிருந்தேன்; நீங்கள் உணவளித்தீர்கள். நான் தாகமாயிருந்தேன்; நீங்கள் என் தாகத்தைத் தீர்த்தீர்கள். நான் அந்நியனாய் இருந்தேன்; என்னை வீடுகளில் சேர்த்துக் கொண்டீர்கள். ஆடை இல்லாமல் இருந்தேன்; ஆடை தந்து என்னை ஆதரித்தீர்கள். சிறைச்சாலையிலிருந்தேன்; என்னை விசாரிக்க வந்தீர்கள். உங்களது அன்பான சேவை எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. வாருங்கள். என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! உலகம் உண்டானது முதற்கொண்டு உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற உங்கள் பிதாவின் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லுவார்" என்று இயேசு மீண்டும் சொன்னார்.

ராஜாவின் வலப்பக்கத்தில் நிற்கும் நீதிமான்கள் ஆச்சரியப்படுவார்கள். "ஆண்டவரே! எப்போது இவற்றை உமக்குச் செய்தோம்?" என்பார்கள். அவர், "என் பிள்ளைகளுக்கு நீங்கள் செய்வது, எனக்குச் செய்ததற்குச் சமம்" என்பார்.

இடதுபுறத்தில் நிற்பவர்களைப் பார்ப்பார். "என் பிதாவினால் சபிக்கப்பட்டவர்களே, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நரகத்துக்குப் போங்கள்; நீங்கள் எனக்கு அந்த நீதிமான்கள் செய்தது போல, ஒன்றுமே செய்யவில்லை" என்பார்.

அதற்கு அந்தப் பாவிகள், "எப்போது நீர் எங்களிடம் உதவிகேட்டு வந்தீர்? எப்போது



## செய்தி

**தேவைப்படுவோருக்கு உதவுவது இயேசுவுக்கு உதவுவது ஆகும்.**

நாங்கள் உதவ மறுத்தோம்?'' என்பார்கள். அதற்கு அவர், ''என்னுடைய பிள்ளைகளுக்குச் செய்ய மறுத்தது எனக்குச் செய்ய மறுத்ததற்குச் சமம்'' என்பார் என்றுசொல்லி முடித்தார் இயேசு.

என் செல்லமே! இதன்மூலம் இயேசுராஜா, நம்மிடம் ஒன்றைச் சொல்ல விரும்புகிறார். நாம் பிறரிடம் அன்பாக இருந்து, பிறருக்கு அன்புடன் உதவினால் அதை தேவனுக்கே செய்கிறோம்.

***செய்முறை:*** **இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகும் மக்கள் யாருக்கெல்லாம் உதவிசெய்வார்களென்று இயேசு சொல்கிறார். பாடத்தைப் படி; படங்களைப் பார்; விடைகளைக் கோடுகளில் எழுது.**



1. ______________________________



2. ______________________________



3. ______________________________



4. ______________________________